97
The Registrar of Books,
Madras 6.

பதிவு எண்—M. 5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

முல்லைக்கொடி

தமிழ்க் கிழமை வெளியீடு :- இது, சான்றாண்மை இதழ்.

97/2.51.

ஆசிரியர் : இளவழகனார்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS 6 APR 1951 MADRAS

கிளை—௫	குருகுலம், மாம்பாக்கம் ; விகிருதி, பங்குனி ; 30—3—51.	தளிர்—௨௪

"குணநலம் சான்றோர் நலனே ; பிறநலம்
எந்நலத் துள்ளதூஉ மன்று"

"கடனென்ப நல்லவை யெல்லாம் கடனறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு."

அருள் மாது

மலையாளத்தில் தெளிச்சேரியைச் சேர்ந்த அம்மையார். இராமாதேவி என்னும் பெயருடையார்.

MADRAS 6 DELY 31 MAR 51 8.30 AM

மனைவாழ்க்கையில் இருந்துகொண்டே அருளில் திளைப்பவர். புகழ்ப் பாடல்களில் திளைத்தல், பாவனையில் உயர்தல், மாணவர்க்கு அருள் வழங்கல் முதலிய சிறப்புகளில் உயர்ந்து வருகின்றார்.

சென்னை, பம்பாய், மங்களூர் முதலிய இடங்களில் இவர்க்கு அன்பர் பலர் பெருகி வருகின்றனர். இப்போது இவர் சென்னையில், சில நாட்கள், வந்து தங்கியிருக்கின்றனர்.

அருள் நெறி — — அன்பர் கடமை

[ஆடலரசு]

இன்று இந் நாட்டில் சமய உணர்ச்சி அதாவது கடவுள் உணர்ச்சியும் மற்றும் அதன் தொடர்பாக நடைபெறும் வழிபாடு, விழா முதலியவைகளும் இன்றியமையாதன அல்ல என்றும், அவற்றால் தான் மக்கள் வாழ்வு வளமிழந்து விட்டதென்றும் பலவாறும் சொல்லி அவற்றைக் கண்டிக்கும் கூட்டம் ஒருபால் பெருகி வருகின்றது.

பிறிதோர் பால் இவைகளெல்லாம் வேண்டுவனவே என்னும் கூட்டமும் இருந்துகொண்டுதான் இருக்கின்றது.

அன்புக்கும் அறிவுக்கும் புறம்பாகாத முறையில் மன்பதையின் உயர்வுக்கு உதவும் வகையில் யார் எதைச் சொன்னாலும் பொறுமையோடு கேட்டு ஆராய்ந்து தக்கவற்றைப் போற்றத்தான் வேண்டும்.

'வேண்டாம் என்பார்' இந் நாட்டின் இன்றைய இழி நிலையைக் கண்டு ஆற்றாமைப்பட்டும், 'வேண்டுமென்பார்' கூட்டத்துள் நடைபெற்ற அல்லது நடைபெறும் இழி செயல்களை எடுத்துக் காட்டியுமே இடித்துப் பேசுகின்றனர். தனிப்பட்ட முறையில் அவர்கட்கு மட்டும் இவற்றின் மீது வெறுப்புணர்ச்சி தோன்றுவதும் எதுவில்லை. அளவுக்கு மீறிய உணர்ச்சி நிலையில் அவர்களிற் சிலருடைய பேச்சும் போக்கும் சில நேரங்களில் வரை கடந்தும் போய் விடுகின்றன என்பதையும் மறுப்பதற்கில்லை.

மேலும், இவர்கள் குறிப்பிட்ட ஒரு துறையில் மட்டும் இந் நாட்டைச் சீர் திருத்த விழையாமல் பல துறையிலும் தமது கருத்துக்களைப் பல வகையிலும் வெளியிட்டு வருகின்றனர். அதனால் பொது மக்களுக்குள் ஏற்படும் விழிப்புணர்ச்சியும் திருத்தமும் கொதிப்பும் குழப்பமும் பலவகையாக இருக்கின்றன. இன்று இந் நாட்டில் எங்கும் இவர்களைப் பற்றிய பேச்சாகவே இருக்கின்றது.

இனி இக் கட்டுரையின் தலைப்புக்கேற்ப, 'வேண்டா மென்பார்க்'குரிய தகுதி திறமைகளையும் அவர்கள் அவற்றிற்காகக் காட்டும் காரணங்களையும் விளக்கிக் கொண்டிராமல், இப்படி ஒரு கூட்டம் தோன்றுதற்குக் காரணமான நிலையில் சீர்கெட்டு நிற்கும்,— 'வேண்டும் என்னும் கூட்டத்தார்' கடமை பற்றியே சிறிது விளக்குவோம்.

கடவுளுணர்ச்சியும், அதன் சொடர்பான செயல்களும் உடையவர்களையே இக் கட்டுரை 'அருள் நெறி அன்பர்' என்று குறிப்பிடுகின்றது.

இவ் வன்பர்கள் முதலாவதாகத் தமது கடவுளுணர்ச்சிக்கு அடையாளமாக அக் கடவுளின் படைப்பாக உள்ள மக்கள் எல்லோரையும் ஒன்றாக எண்ணி அன்போடு நடத்த வேண்டும்.

சமயப் பெரியோர்களெல்லாம் ஒருசேரச் சாதி வேற்றுமைகளைக் கண்டித்திருந்தும் கடவுள் முன்னிலையிற் கூட மக்களைப் பல சாதியாகப் பிரித்துவைத்து ஒரு சாராரை உயர்த்தியும் பிறிதோர் சாராரைத் தாழ்த்தியும் வந்ததனாற்றான் இன்று சமயவுணர்ச்சியும் கடவுளுணர்ச்சியும் வேண்டியதேயில்லை என்னும் கூட்டம் எழுந்தது.

அரசியல் சட்டத்தின்படி இச் சாதி முறைகள் ஒழிக்கப்பட்டு விட்டன என்றாலும், இன்னும் வாழ்க்கை முறையில் ஒழியவில்லை. அண்மையில் ஒழிந்துவிடும் என்று சொல்லக்கூடிய முறையிலும் பழக்க வழக்கங்கள் திருத்தமடையவில்லை. அருள் நெறியன்பர்களே, திருஞான சம்பந்தர், சுந்தரர், இராமானுசர் முதலிய சான்றோர்களைப் போல, இச் சாதி முறைகளை ஒழித்துக் கட்டப் பலவகையானும் முயலவேண்டும்.

இரண்டாவதாகக் கடவுளின் இருப்பிலும், ஆற்றலிலும், அருளிலும் நம்பிக்கை யுடைய இவ் வன்பர்கள், கொள்கையினால் வேறுபட்டவர்களை வெறுத்து ஒதுக்கி ஒழிக்க முற்படக்கூடாது. உண்மைகளைத் தக்கபடி பரப்பிப் போற்றிக்கொண்டு வந்தால் போதும்.

உண்மைகளை அறிந்து போற்றும் வகையில் நாட்டமும், பொது நன்மையிலேயே கருத்தும் இருந்தால் கட்சிப் பிணக்குகளை மிகுதப்படுத்தும் வகையில் செயலாற்றாமல் கூடிய மட்டும் ஒற்றுமைப் படுத்தவும், இயலாதேல், தனித்தனியே தத்தம் கொள்கைகளை அன்புக்கும் அறிவுக்கும் புறம்பாகாத முறையில் விளக்கவும், வேற்றுமைகளைக் கண்டிக்கவும் இடந்தந்து நாட்டில் அமைதியும் அன்பும் அறிவும் செழிக்கச் செய்ய வேண்டும்.

மூன்றாவதாகக் கடவுள் உணர்ச்சி வேண்டா மென்பாரையும் அவர்கள் கூட்டங்களையும் காண்டலும் கேட்டலும் கூடக் கூடாது என்று வெறுத்து

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

- உயர்ந்த -
வைரங்கள்
சவரன் பொன் நகைகள்
அசல் வெள்ளி
சாமான்கள்
உத்தரவாதமுள்ளவை
S. சாமிநாத அய்யர் & சன்ஸ்
111, நேதாஜி போஸ் ரோடு,
சென்னை 1.
"Silver Medals & Prize Cups are always available for Sale"
—— GUARANTEED ——
JEWELLERY HOUSE

வயல்களில் நட்ட நாறுகள் இரண்டொரு கிழமை கழிந்தபின் பசுமை ஏறி வளரத் தொடங்கும்; வளர்ந்த முதல் சுருள் விரியக் கண்டதும், உழவர், களை களையும் பதம் இதுதான் என்று குறிப்பிடுவர். அது கேட்டு, உழத்தியர், வயலின் வரம்பணைவர். வருகின்ற வழியில், சங்குகள் உயிர்த்த முத்துக்கள் அவர்கள் கால்களைத் தடுக்கும்; இடறி இடை தளர்ந்து நடந்துவருவர். வண்டுகள் வட்டமிடுகின்ற அவர்கள் கூந்தல் முதுகில் ஒரு சுமையாய் அசைந்து அலைய, இவ்வாறு இள நடையுடன் அவர்கள் கழனிகட்கு வருகின்றனர்.

வழியில் செங்கழுநீர் மலர்கள் அங்கங்கும் நீர் நிலைகளில் மணங்கமழ்ந்து காட்சியளித்தல் கண்டு, உழவர் மகளிர், அவற்றை ஆர்வமாய்ப் பறித்துத் தம் தலையில் அழகு உண்டாக அணிந்து கொள்வர். மலர்களில் உள்ள வண்டுகள் இவர்கள் கூந்தலின் இயற்கை மணங் கண்டு கூந்தலையும் மொய்க்கும்; அவற்றைக் கைகளால் தள்ளி நீக்க முயல்வர். கைகளும் மலர்களைப்போல் விளங்குதலால், இன்னும் அண்டை பக்கங்களில் உள்ள வண்டுகளும் அவற்றை மலர்களென்றே எண்ணி மேலு மேலும் வந்து மொய்க்கும். இங்ஙனம், கூந்தலில் உள்ள வண்டுகளை நீக்கிக்கொள்ள முயன்று, தம் கை மலர்களால் அயல் வண்டுகளையும் அவர்கள் வரவழைத்துக் கொள்கின்றனர்

இந்த இளைப்புத் தீர, அங்கங்கே உயர்ந்து விளங்கும் தாமரைத் தண்டின் அடியில் அமர்ந்து, தண்டை வளைத்துத் தாமரை மலர்களை வாய்வைத்து அவற்றிலிருந்து ஒழுகும் புதுத்தேனை அம் மகளிர் பருகுவர். உடனே, எட்டாம் பிறைத் திங்களை ஒத்த அவர்கள் நெற்றி வெயர்வு அரும்பும்; சிறிய முல்லையரும்புகளை யொத்த அவர்கள் பற்கள் புன்முறுவல் கொள்ளும்.

களையெடுக்கும் மகளிர் இங்ஙனம் வயலெல்லாம் பல்லாயிரக் கணக்கில் வந்து நிரம்புவர். எல்லாரும் அரும்பு

பெரிய புராணம்

போல் உடல் நலம் அமைந்த இள மாதர்கள்! அமிழ்தம்போல் இன்மொழி பேசும் பெருந்தன்மைப் பெண்கள்!

ஒரு பக்கம் களை யெடுத்தற்குரிய இளம் பயிர்கள் விளங்குகின்றன என்றால், மற்றொரு பக்கம் கரும்பும் நெல்லும் உயர்ந்து தழைத்து விளைந்திருக்கும். கரும்புகள் கமுகுபோலவும், நெல் கரும்புகள் போலவும் பார்வைக்குத் தோன்றும்படி அவ்வளவு செழித்தோங்கித் திகழும்.

உழத்தியர் வயலுக்கு வரும்போது தம் சிறு பெண்களையும் உடன் அழைத்துவருவர். அச் சிறு மகளிர், நத்தைகளின் ஓடுகளில், மலர்களில் ஒழுகும் தேனைப் பிடித்து நிரப்பி, அவற்றில் சங்கு ஈன்ற முத்துக்களை இட்டு ஆமைக் குட்டிகளின் ஓடுகளை அடுப்பாகக் கொண்டு அவற்றின் மேல் உலையாக வைத்து, சிவப்பு ஆம்பல் மலர்களைச் செந்தீயாகச் செருகி ஊதி, வரம்புகளில் சமையல் விளையாட்டுகள் நிகழ்த்திக் கொண்டிருப்பர்.

நீர் நாட்டின் இடையிடையே தோன்றுங் காடுகள் என்பவை மூங்கிற் காடுகளே; சோலைகள் என்பவை பசுங் கரும்புகளே! பக்கங்களி லெல்லாம் நீலக் குவளை மலர்கள்! கழனிகளிலெல்லாம் நெருங்கிக் கிடக்கும் சங்குகள்! நீர்க்கரைகளில் எங்கும் இள அன்னங்கள்! குளங்க ளெல்லாம் கடற் பரப்புப் போன்ற தோற்றம். நீர் நாட்டின் நலங்களை வேறு நாடுகள் ஒவ்வா.

கரும்புகளை ஆலையில் இட்டுச் சாறு செய்வார் மகிழ்ச்சியால் ஆரவாரிக்கும் பூசை ஒருபுறம்; சோலைகளில் வண்டுகள் இசைக்கும் இன்னொலி ஒருபுறம்; உலகச் சிறப்புப் பெற்ற நான்மறை முழக்கம் ஒருபுறம்; இவை யெல்லாம் கடலொலியைவிட மிகுந்து கலந்தெழும்.

அன்னம் விளையாடுகின்ற பொய்கைகள் சிலவற்றில் கூட்டங் கூட்டமாய் எருமைகள் வந்து நீரில் விழுந்து படியும்; அதனால் உண்டாகின்ற ஓசையினால், நீரிலிருக்கும் இளமையான வாளைமீன்கள் துள்ளி உயர எழுந்து, குளங்களில் தாவிவளரும் கமுகு மரங்களின் மேல் வளைவாய்ப் பாயும். அப்போது அது, வானத்தில் தோன்றும் வானவில்போல அழகாகக் காட்சியளிக்கும்.

பொய்கைக் கரைகளின் சோலைகளில் வாழும் வண்டுக் கூட்டங்கள் பொய்கை மலர்களில் வந்து அமர்ந்து அவற்றின் தேனைப் பருகும்; பொய்கைகளிற் பொருந்தி வாழும் மீன் கூட்டங்கள் சோலைகளில் துள்ளித் தாவி அவற்றின் பழங்களை உதிர்க்கும்.

இங்ஙனம் நீர்நிலைச் செழுமையமைந்த நாடு காவிரி நாடு.

நஞ்சன்கூடு பல்பொடி
பாக்டெரியாரின்

யுனைடெட் கன்ஸர்ன்,
54, பந்தர் தெரு, :: சென்னை 1.

"எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே."
—புறநானூறு.

கிளை	விகிருதி, பங்குனி	தளிர்
3	30-3-51 வெள்ளி	24

நெசவு தொழில்

நம் நாட்டில் உழவு தொழிலும் நெசவு தொழிலும் மிகத் தொன்மை வாய்ந்தவை. நம் நாட்டுக் கிராமங்கள் இன்றளவும் அழிந்து விடாமலிருப்பதற்கு இவ்விரு தொழில்களே காரணம்.

திருவள்ளுவர் கூட நெசவு தொழில் செய்து வந்தார் என்று அவரைப் பற்றி ஒரு குறிப்பு வழங்கி வருகின்றது. உழவு தொழிலோடு ஒப்ப நெசவு தொழிலும் தகுதி வாய்ந்தது என்பதில் ஒரு சிறிதும் ஐயமில்லை.

குடும்பத்தில் குழந்தைகள் முதல் கிழவர்கள் வரை முற்காலங்களில் எல்லாரும் நூற்கத் தெரிந்திருந்தனர். இராட்டையின் இனிய ஓசை கேட்காத கிராமம் இல்லை என்னும்படியாக இருந்தது நம் பண்டைத் தமிழகம். வேறு வேலையில்லாத நேரங்களிலெல்லாம் சோம்பலின்றி நூற்பர். "வம்பளந்து வீண்பொழுது போக்கமாட்டார்; வாசலிலே கூட்டமிட்டுப் பேச மாட்டார்; சோம்பித் தூங்க மாட்டார்; குடி சுத்தப்படுமென்று சொல்லி-ஆடு ராட்டே!" என்றும்,

"பட்டணத்து வீதிகளில்
சுற்றி யலைந்தே-மிகப்
பாடுபடும் கிராமத்துப்
பத்தினிப் பெண்கள்
இட்டமுடன் தம்குடிசை
நிழலி லிருந்தே
நூலிழைத்துப் பிழைப்பர்
என்று-ஆடு ராட்டே!"

என்றும் பாடினர் நம் நாட்டு அரசுக் கவிஞர் நாமக்கல் இராமலிங்கர்.

திருநெல்வேலியைச் சேர்ந்த வயது முதிர்ந்த அம்மை ஒருத்தி நாள் ஒன்றுக்கு ஒன்று முதல் இரண்டு *சிட்டங்கள் நூற்று வந்ததை யான் அறிவேன்.

ஆலைகள் இந் நாட்டிற்கு வந்தது முதற்கொண்டு இத் தொழில் குன்றத் தொடங்கியது. சிறிது சிறிதாய் இராட்டையில் நூற்பதை விட்டுவிட்டு ஆலை நூலை வாங்கித் தங்கள் தொழிலை நடத்தத் தலைப்பட்டனர். இன்று நெசவாளர் எல்லாரும் ஆலை நூலையே எதிர்பார்த்திருக்கின்றனர். போதுமான அளவுக்கு ஆலை நூல் கிடைக்காததால் நெசவாளர் வாடி நலிகின்றனர்.

ஆலை நூலை நம்பி நெசவை மட்டும் நடத்தப் பழகிவிட்ட நெசவாளர், உடனடியாகப் பண்டை நிலைக்கு, அதாவது, இராட்டையில் நூற்று அதனைக் கொண்டு தங்கள் தொழிலை நடத்தும் நிலைக்குப் போக முடியாது. ஆகவே இத் தொழில் இறந்து படாமல் காக்க வேண்டுமாயின், உடனடியாக நெசவாளர்க்குப் போதுமான ஆலை நூல் கொடுத்துதவ வேண்டும்.

ஆலை நூலையே நம்பியிருத்தலை விட்டொழித்துப் படிப்படியாக நம் முன்னைய நிலைக்குப் போகும் நிலையையும் சூழலையும் ஏற்படுத்திக்கொண்டால், நம் நாட்டுக் கிராமங்கள் செழித்து வளரும். இதற்கான உதவியை அரசினரும், அகில பாரத சர்க்கா சங்கத்தினரும் செய்து வருகின்றனர். நமக்குத்தான் ஆலைகளின் வேட்கை தீர்ந்த பாடில்லை!

காந்தியடிகள் தம் இறுதிக் காலம் வரையும் நம் பண்டைய முறைப்படி இராட்டையில் நூற்று அதனைக் கொண்டு நெசவு தொழிலை நடத்தவேண்டுமென்று வற்புறுத்தி வந்தார். அவர் அறிவுரையை நம்பிப் பின்பற்றியவர் மிகச் சிலரே.

இராட்டையில் நூற்பது ஒரு கடின வேலையன்று. ஓய்வு பெறும் நேரத்தில் இனிய தென்றற் காற்று வீசும் திறந்த வெளியிலோ அல்லது தங்கள் தங்கள் வீட்டு முற்றத்திலோ பலர் கூடியிருந்து பேசிக்கொண்டோ அல்லது இனிய பாடல்களைப் பாடிக்கொண்டோ நூற்கலாம்.

தறியில் நெசவு செய்யத்தான் சிறிது பயிற்சி தேவை. ஒவ்வொரு குடும்பத்தாரும் அன்றாடம் நூற்கும் நூலைச் சேர்த்து வைத்து ஒரு திங்களோ அல்லது இரண்டு திங்களோ கழித்து நெசவாளரிடம் கொடுத்துத் துணியாக நெய்து தரச்சொல்லிப் பெற்றுக்கொள்ளலாம்.

இனியேனும் இம் முயற்சியில் ஈடுபட்டால் துணிக் கருப்பு ஒழியும். நாடு நலமடையும்.

ஆலைத்துணி அவா நீங்கிக் கிராமங்கள் வாழ்க!

—'முத்துசுவாமி'

* 4 அடிச் சுற்றளவு கொண்ட வீசனத்தில் 80 முறை நூலைச் சுற்றியதும் ஒரு முடி போட்டுக் கொள்வர். இப்படி 8 முடிகள் ஆனதும் நூலை வீசனத்தினின்றும் எடுத்து வைத்துக்கொள்வர். இது ஒரு சிட்டம் எனப்படும்.

குருகுல நிகழ்ச்சிகள்

கிராமசேவை

வழக்கம்போல் கிராமசேவை புது மாம்பாக்கம், பழைய மாம்பாக்கம் ஆகிய கிராமங்களில் குருகுலப் பள்ளி ஆசிரியர் மாணவர் குழுவினரால் நடத்தப்பட்டது.

கிராமவாசிகள் இன்றைய உலகில் நாகரிகத்தில் மிகவும் கீழான நிலையிலுள்ளனர் எனவே கூறவேண்டும். கல்வியின்மை மிகவும் அதிகம். தூய்மை என்பதில் சாலவும் கீழே. இப்படிப்பட்ட நிலையிலுள்ள கிராமங்களுக்கு முதலில் கல்வி இன்றியமையாதது என்பதை மக்களுக்கு எடுத்துக் கூறப்பட்டது.

அதன் பயனாய், இன்று குருகுல முதியோர் கல்லூரியிலும் தொடக்கப் பள்ளியிலும் மாணவர் எண்ணிக்கை மிகப்பெருகி யுள்ளது. குருகுல அன்பர்கள் இவ்வாறு சுற்றுப்புற கிராமங்களில் சென்று தொண்டு செய்யுங்கால் கிராம மக்கள் உள்ளக் கிளர்ச்சியோடு உடன் கலந்து தக்க நிலையில் விழாக்களைச் சிறப்பிக்கின்றனர்.

—'கிராம சேவைச் செய்தியாளர்'

கைத்தறி ஆடைகள்

வணிகக் குறி!

—N. K. M.—

தங்க நாடா

(பதிவு)

எண் 20 முதல் 100 வரையில் வேட்டி, சேலை, துண்டு, போர்வை, மேலாடை முதலியவை பல வகைகளிற் கிடைக்கும்.

நூலாடைகட்கும்

பட்டாடைகட்கும்

நம்பிக்கையான இடம்:

கருப்பண முதலியார்

ஸ்டோர்ஸ்,

துணி வாணிபம்,

53, கிடங்குத் தெரு, சென்னை 1.

முருகவேள் நூல்கள்

தமிழர் கண்ட அழகியல், வாழ்க்கையியல் அமைப்புகளின் ஒளிப் பிழம்பே முருகவேள்! பற்பல பாடல்களில் பற்பல சித்திர ஒளியுடன் அத் தெய்வதக் காட்சி மிளிர்கின்றது. வாழ்க்கையில் ஒளியும் அமைதியும் பெருமித நிலையும் உரிமையுங் காண விரும்பும் மக்களுக்கு, முருகவேள் பாட்டுகள், வற்றாப் பொற் களஞ்சியமாகும். இவற்றை உருக்கத்துடன் பாராயணஞ் செய்தும், பயின்றும் காலந்தோறும் நன்மை யடைந்த பெரியோர் எவ்வளவோ பலர்.

ஒத்த அளவில், பன்னிருகையன் நம் முருகையன் பாடல்களும் நூல்களும், பன்னிரு திருமுறைகளாக அதாவது பன்னிரு தொகுதிகளாக முறை செய்யப்பெற்று, ஒரு கட்டுக்கோப்பான முறையில், வழங்கிவரச் செய்தல் அன்பர்க்கு நீங்காக் கடமையாகும். ஒரு தனிப் பேழையில் அவை அமைக்கப்பெற்றால், காட்சிக்கும் கருத்துக்கும் விருந்தாயிருக்கும்.

ஒரு செயல் நல்லது என்று தெரிந்தால், அதனில் ஆர்வமும் தீவிரமுங் கொள்ளுதல் ஒரு நாட்டின் விரைந்த வளர்ச்சிக்கு ஏதுவாகும் என்பது அனைவரும் அறிந்ததே.

இத் தொண்டு, கந்தவேள் திருவடிக்குச் செய்யுந் தொண்டு! அவற்றை அருளிச்செய்த அருளாசிரியர் பலர்க்குஞ் செய்யுந் திருவடித் தொண்டாகும்! பின்னுள்ளோர் நலத்தின் பொருட்டு இயற்றி உதவிய அவ் வாசிரியர்க்குச் செய்யும் ஒரு நன்றிச் செய்கையுமாகும்.

முருகவேள் நூல்களைப் பன்னிரு திருமுறைகளாக வகுத்து, மொத்தம் 36 பகுதிகளாக நான்கு ஆண்டுகளில் வெளியிடும் நன் முயற்சி இப்போது மேற்கொள்ளப் பெற்றிருக்கிறது. இதனைச் செய்வோர், முருகவேள் நூல்களில் தம் வாழ்நாள் முழுதும் திளைத்துத் திளைத்துத் தேக்குற்றிருக்கும் ராவ்பகதூர் தணிகை மணி திரு. வ. சு. செங்கல்வராய பிள்ளை M. A. மாம்பாக்கம் குருகுல அச்சகத்தில் இவை அச்சிடப்பெறும்.

1. 10–4–'51 க்குள் மாம்பாக்கம் குருகுலத்தில் (மதுராந்தகம் அஞ்சல்) ரூ. 1 செலுத்தித் தம் பெயரைப் பதிவு செய்து கொள்வோர்க்குப் பகுதி ஒன்று ரூ. $1\frac{1}{4}$ விலைக்குக் கிடைக்கும்; அஞ்சல் செலவு வேறு.

அன்பர்கள் தாமும் தமக்குத் தெரிந்தவர்களுமாக இதில் ஈடுபட்டுத் தாமும் பயன் பெற்று முயற்சியையும் ஆதரிப்பார்களாக!

—சி. து. க.

கந்தர் கழலெழுபது

[திரு. வ. சு. செங்கல்வராய பிள்ளை M. A.]

எல்லைக் கணக்கறிந்தவ் வேமனார் தூதர்வா
ஒல்லை அவரோட ஓட்டுவதும்[1]—நல்ல
அருணெறியைக்[1] காட்டியெனை ஆளுவதும் என்பாற்
கருணைபுரி கந்தர் கழல். 43

வினைப்பகையை வாட்டுவதும் வேளைக் குதவி
நினைப்பதனை[1] ஏழை நினைத்த—மனப்படியே
கூட்டுவதுங் கூடாத கோணினால் நல்லதே
காட்டுவதுங் கந்தர் கழல். 44

சிந்திப் பரியன சிந்திக்கச் செந்தேனை
முந்திப் பொழிவன[2] முட்டிவரு—தொந்தப்
பழவினை தீர்ப்பன பற்றார் கலங்கக்
கழல்ணிபூண் கந்தர் கழல். 45

சுழலார் துயர்வெயிற் சுட்டிடும் போது
நிழலாக நின்று நிலவும்—கழலாத
வெவ்வினையை வீட்ட[3] விரும்பும் அடியார்தங்
கௌவைதவிர் கந்தர் கழல். 46

சேய சிவலோகஞ் செல்வதற்கோர் ஏணியாம்
ஆய மனத்தளர்ச்சிக் காணியாம்[4]—மாயை
பலமான நந்தம் பவக்கடலைத் தாண்டக்
கலமான கந்தர் கழல். 47

கணக்கு வழக்கைக் கடந்துநிற்கும்[5] என்றும்
இணக்கின்றி நின்றங் கிலங்கும்—பிணக்கொழிக்கும்
சஞ்சலங்கள் நம்மனதைத் தாக்கா வகைபுரக்கும்
கஞ்சமலர்க் கந்தர் கழல். 48

இறந்தாற் கதியும் இருந்தால் மதியும்[6]
பிறந்தாற்றன் மாட்டென்றும் போர—அறந்தானுட்
கொண்டுளமெய் யன்புங் கொடுத்துதவுங் கண்டீர்கற்
கண்டனைய கந்தர் கழல். 49

ஆறு பதியமரும் ஆறு தலையளிக்கும்
ஆறு திருவெழுத்தும் அன்புடனே—கூறுமவர்
சிந்தை குடிகொள்ளும்[1] சித்தம் சிவமாக்கும்
கந்தமெழு கந்தர் கழல். 50

மாவாரத் தோடும் மகிதலத்தி லேதோன்றி
நாவாரப் பாடியே நாமுய்யத்—தேவாரம்
தந்ததே ஈசன் தலந்தோ றுலாவியே
கந்தமார் கந்தர் கழல். 51

கழல் ஆட்கொண்ட வண்ணம்

விஜயன்—இலக்கருள் ஒருவன்

ஆறு முகப்பிரான் அன்றித் துணையெனக்கு
வேறில்லை யென்ற விசயவனவன்[2]—தேறியே
வெற்றிபெற வுற்றபடை மிக்குதவி வைத்தது
கற்றவர்சொல் கந்தர் கழல். 52

தேவசேனை

புங்கப் பரங்குன்றம் போந்தங் குலவியதே
கொங்குச் சுரிகுழற் குஞ்சரியார்—தங்கழுத்தில்
மங்கலிய தந்து[3]புனை மஞ்சுநிறை செஞ்சொரூபர்
கங்கைவளர் கந்தர் கழல். 53

வள்ளியம்மை

மன்னு சசிவல்லி வருடச் சிவந்தது[4]
கன்னல்மொழி வள்ளியுறை காடுபுனம்—கன்னமிடச்
சென்று திரிந்ததே செல்வர் சிவஞானக்
கன்றெனது கந்தர் கழல். 54

இடும்பன்

கடுந்தவத்துச் செந்நெறியிற் காவடிபோ லேந்தி
இடும்பன்[5] கொடுவந்த எணார்—தடங்கொள்
சிவமயமாய்க் கோட்டின் சிகரத் திலகுங்
கவசமதாங் கந்தர் கழல். 55

---

1. 'வருகால தூதர்கெட முடுகுவதும், அருணெறியில் உதவுவதும் நினையுமவை முடிய வருவதும்'—சீர்பாத வகுப்பு.
2. 'சிந்திப் பரியன சிந்திப் பவர்க்குச் சிறந்து செந்தேன் முந்திப் பொழிவன'—அப்பர்-திருவையாறு-IV-92-1
3. 'சுழலார் துயர்வெயிற் சுட்டிடும் போதடித் தொண்டர் தின்னும் நிழலாவன * * கழலா வினைகள் கழற்றுவ'—அப்பர்-திருவையாறு-IV-92-1.
4. 'பரகதிக்கவி தேணி * * மனத்தளர்ச்சிக் காணி'—திருப்புகழ்ச் சிறப்புப் பாயிரம்.
5. 'கணக்கு வழக்கைக் கடந்த அடி'—அப்பர்-திருவதிகை-VI-6-3.
6. 'இறந்திட் டுப்பெற வேகதி யாயினும், இருந்திட் டுப்பெற வேமதி யாயினும், இரண்டிற் றக்கதொ ருதியம் நீதா இசைவாயே'—திருப்புகழ் 631.

1. 'ஆறெழுத்தும் அன்பினுடன் கூறுமவர் சிந்தைகுடி கொண்டோனே'—கந்தர் கலிவெண்பா.
2. 'ஆறுமா முகப்பிரான் அன்றி யிவ்விடை வேறொரு துணையிலை மெய்ம்மை யீதெனத் தேறினன்'—கந்தபுராணம்-மூவாயிரவர் வதை-76. தணிகை நாயகன் மாலை 76.
3. தந்து—நூல்.
4. 'மன்னு மலைமகள் கையால் வருடின'—அப்பர்-இன்னம்பர்-IV-100-1. 'செல்விதன் செங்கம லக்கரத்தால் வருடச் சிவந்தன மாற்பேறுடையான் மலரடியே'—அப்பர்-மாற்பேறு-IV-108-2.
5. தணிகை நாயகன் மாலை—13.

(2-ம் பக்கம் தொடர்ச்சி)

ஒதுக்கி விடுவதை விட, உறுதியும் தெளிவும் கொண்ட சமய உணர்ச்சியுடன் அவர்களோடு நெருங்கிப் பழகி, அவர்கள் எவ்வளவு ஆத்திரத்துடன் பேசினாலும் சினங் கொள்ளாமல் பொறுமையோடு அவர்கள் அவ்வாறு கூற நேர்ந்ததற் குரிய அடிப்படைக் காரணங்களை ஆராய்ந்து அறிந்து, அவற்றுள் திருத்தக் கூடியவற்றைத் திருத்தியும், விளக்கக் கூடியவற்றை விளக்கியும் உண்மைச் சமய உணர்ச்சியை எங்கும் பரப்ப முயல்வதே சிறப்பாகும்.

நான்காவதாக 'வேண்டாம் என்பார்' கூட்டம், தம் கொள்கைகளை அறிவுத் துறையில் நின்று எழுத்தாலும் பேச்சாலும் எங்கும் பரப்பி வருவதனால், பெருகி வருவதைக் கண்டு ஆத்திரப் படுவதைவிட, 'வேண்டுமென்பார்' கூட்டத்தாரில் செல்வமும் செல்வாக்கு முடையார் அதே முறையில் தக்கவர்களைக் கொண்டு உண்மைச் சமய உணர்வைப் பரப்ப முன் வரவேண்டும்; வீம்புக்காகத் தாம் செய்யும் விழாக்களையும் திரு முழுக்குகளையும் (அபிடேகம்) பெருஞ் செலவில் மிகவும் விளம்பரப் படுத்திச் செய்து விடுதலிலேயே மன நிறைவு கொண்டுவிடக் கூடாது.

எடுத்துக் காட்டாகத் தேவாரப் பாடல் பெற்றதனாலேயே சிறப்புற்று நிற்கும் ஒரு திருக்கோயிலின் பெரு விழாவில ஆயிரக் கணக்கில் பொருள் செலவிட்டு அமைக்கப் பெறும் நாதசுரக் கச்சேரிகளையும், பூத் தேர்களையும், வாண வேடிக்கைகளையும் இன்ன பிறவற்றையும் காண முடிகிறதே ஒழிய தக்கோர் விரிவுரைகளையோ, தேவார இசையரங்குகளையோ காண முடிவதில்லை. தேவார முதலியன பாடப் பெற்றாலும், பத்து நாளும் தொடர்ந்து இரவு நேரத்தில் வெளியிடத்தில் அலை காற்றில் பனியில் மணிக்கணக்காக நின்று பாடும் தேவாரப் பாடகர்களுக்குக் கொடுக்கப்படும் தொகை அவர்களின் பேருழைப்புக்குத் தக்க கூலியாகக் கூடக் காணப் படுவதில்லை.

இந் நிலையில் திருவருட் பாடல்களை எங்கோ ஒரு சிலர் தம் பற்றினாலும், குடும்ப வழக்கை ஒட்டியும் கற்கின்றார்களே ஒழிய, மற்றப் பாடல்களை விரும்பிக் கற்பார்க்கு ஏற்படுவதைப் போல மதிப்போ, செல்வமோ தமக்கும் உண்டாகும் என்று நம்பிக் கற்க முடிவதில்லை.

உண்மையில் தேவாரம் திருவாசகம் திரு நாலாயிரம் முதலியன சான்றோர்களின் அருள் வாக்குகள் என்பதோடு, இந் நாட்டின் பண்டைய இசை இன்னது தான் என்று அறிந்து கொள்ளுதற்கும் அதை அழியாமல் காப்பாற்றுவதற்கும் துணை செய்யக் கூடிய பேரிசை நூல்கள் என்பதையும் மக்கள் உணரவேண்டும். உணர்ந்து தமிழிசைச் சங்கத்தார் செய்யத் தொடங்கியுள்ள பண் ஆராய்ச்சிப் பணியை மேலும் தொடர்ந்து விரிவான முறையில் செய்தும், காலத்திற் கேற்ப இத் திருவருட் பாடல்களைப் புதிய முறையில் சுரப்படுத்தியும் பாடச் செய்யவேண்டும். செய்தால், எந்த இசைப் பாடல்களுக்கும் மேலான முறையில் இவற்றை வழங்கச் செய்ய முடியும் என்பதையும் நம்பவேண்டும். நம்பி, அதற்கேற்ற முறையில் இவற்றிற்கு மிக்க விளம்பரமும், மதிப்பும் ஆதரவும் தரவேண்டும். இல்லையேல் உண்மைச் சமய உணர்ச்சி இந் நாட்டில் நிலைக்கும் என்று சொல்வதற்கில்லை. ஆதலின் அருள்நெறி யன்பர்களின் பெருங்கடமை, சான்றோர்களின் நூல்களுக்கும் வாக்குக்கும் முதன்மையும் விளக்கமும் தந்து அவற்றின் வழி ஒழுகலே ஆகும்.

"சொற்கோவும் தோணிபுரத்
தோன்றலுமெம் சுந்தரனும்
சிற்கோல வாதவூர்த் தேசிகனும்—
முற்கோலி
வந்திலரேல் மாமறைநூல்
தானெங்கே நீறெங்கே
எந்தைபிரான் ஐந்தெழுத்தெங் கே?"

என்றபடி.

இத் தென்னாட்டில் சிவ நெறியும், திருமால் நெறியும் மிகத் தழைத்தோங்கவும், எண்ணற்ற திருக்கோயில்கள் எழுந்து சிறக்கவும், அவற்றிற்குப் பேரும் புகழும் நிலைக்கவும் பெருங் காரணமாக இருந்தவை, இருப்பவை நாயன்மார்களும் ஆழ்வார்களும் பாடியுள்ள தேவார திருவாசக திருநாலாயிரச் செழுந்தமிழ் மாமறைகளே யாகும். கடவுள் தொடர்பாக இவற்றைப் போன்ற மிகுதியான மொழி நலமும், பத்திச் சுவையும் ததும்பும் பெரும்பாலான பாடல் வேறு மொழியில் கிடையாது. ஆகவே கடவுள் உணர்ச்சியும் திருக்கோயில்களும் இன்ன பிறவும் நிலைபெற்று நலம் பயக்கவேண்டும் என்று விழைவார், வீணாக அவற்றை வேண்டாம் என்பாரை வெறுப்பதையும், ஒழிக்க முற்படுவதையும் விட்டு, தம் சார்பான செல்வர்களையும், மடாதிபதிகளையும், திருக்கோயில் அறங்காவலர்களையும் திருத்தி அவர்களிடமுள்ள பெருஞ் செல்வத்தைக் கொண்டு, மேற் சொன்ன திருவருட் பாடல்களையும், அவற்றின் உண்மைக் கருத்துக்களையும் தக்கவர்களைக் கொண்டு பரப்ப முன்வர வேண்டும்.

மேற் சொன்ன திருத்தங்களோடு பலவகைக்கலைகளையும்போற்றவேண்டுவது அருள் நெறி அன்பர்களின் கடமையே என்றாலும், சமய உணர்ச்சிக்கு அடிப்படையான அறிவுத் துறைப் பணிகளை—அதாவது தேவார முதலிய தெய்வத் திருப் பாடல்களை ஓதுவார்க்கும், சமய விரிவுரைகளைச் செய்யும் சான்றோர்க்கும், பெருமதிப்பும் பேராதரவும் கொடுப்பது, நல்ல நூல்களை வெளியிடுவது, பிறநாட்டுச் சமயத்தாரிடம் தொண்டு வழிபாடு முதலியவற்றில் காணப்படும் சில பல ஒழுங்கு முறைகளையும் தழுவிக் கொள்ளுவது முதலியவற்றைச் செய்வதையே தமது முதற் கடமையாகக் கொள்ளவேண்டும் என்க.

Telegrams: "RAMBROS"

N. Ramu Bros;

GENERAL HARDWARE
MERCHANTS

AVANASHI ROAD,
COIMBATORE.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
31 MAR 1951
MADRAS

"முல்லைக் கொடி"

குருகுலத்தின் கிழமை இதழ்.

நல்ல தமிழில், புரியும் வகையில்,
உரிய விலையில்,
பலதுறைக் கருத்தில்,
சீர்திருத்த முறையில்,
சுவைப் பண்பில், பணி உருவில்
வெள்ளிக் கிழமைதோறும்
வெளிவரும்
ஒரு பெருந்தன்மையான
உணர்ச்சி வெளியீடு!
ஆண்டுக் கையொப்பம் ரூ. 4
வெளிநாட்டுக்கு ரூ. 5

குறிப்பு :—

குருகுலத்தார்க்குக் கட்டணம் இல்லை; தமிழாசிரியர்க்கும், திருவள்ளுவர் கழகங்களுக்கும் ஆண்டுக் கையொப்பம் ரூ 3 மட்டும்.

இதழ் விற்பனையாளர்

எல்லா ஊர்களிலும் தேவை;
ஆறில் ஒன்று கழிவு தரப்பெறும்.
இசைந்த முன்பணத்துடன்
தேவைக்கு எழுதுக!

விளம்பரத் திட்டம்

உள் பக்கம் :

ஒரு பத்தியில் ஓர் அங்குலம் ஒரு தடவைக்கு ரூ. $1\frac{1}{2}$. நீண்ட கால ஒப்பந்தங்களுக்கு ரூ. 1.

கு-பு.—நான்கு அங்குலத்துக்குக் குறையாத விளம்பரமும், ஓர் ஆண்டுக்குக் குறையாத ஒப்பந்தமும் முதன்மையாகக் கவனிக்கப்பெறும்.

மேல் பக்கம் :

முழுப் பக்கம்	ஒரு தடவைக்கு	ரூ.	30
அரைப் பக்கம்	,,	,, ரூ.	16
ஒரு பத்தி	,,	,, ரூ.	12

கு-பு.—தொடர்ந்த விளம்பரங்களுக்கு, கட்டண எளிமை கருதப்பெறும்.

குருகுலம், மாம்பாக்கம்;

(வடதிருச்சிற்றம்பலப் பெருவெளி)

மதுராந்தகம் (அஞ்.)

இது,

திருக்குறள் மறைக்குச்

செய்கை நிலையம்.

நாட்டு மக்கள், 'மொழி' 'கலை' 'தொழில்' 'அருள்' 'பணி' என்னும் ஐவகை வாழ்வியல் திறமைகளிற் சிறந்து திகழ்வதற்கு முயல்வது.

பள்ளி, கல்லூரி, கலையரங்கு, அச்சகம், நூற்பதிப்பு, இதழ்ப் பதிப்பு, படிப்பகம், தொழிலகம், அருள் நிலையம், உணவு விடுதி முதலிய பல்வகை உறுப்புகளுடன் பணி புரிவது.

வாழி, மன்பதை!

குருகுலத்தில் **உணவு விடுதி**

- பிள்ளைகள், பண்பிலும் திறமையிலும் இளம்பருவத்திலிருந்தே பழக்கம் பெற, குருகுல வாழ்க்கைதான் சிறந்தது!
- சுவைபொருந்திய நல்வாழ்க்கையைச் சிறு பருவத்திலேயே உருவாக்கிக்கொள்ள, எப்போதும் குருகுலச் சூழலே ஏற்றது.
- மதுராந்தகம் உயர்நிலைப்பள்ளி முதலிய அண்மையிடங்களிற் சென்று கல்வி பயில்வோர், குருகுல விடுதியில் இருக்க விரும்பினால், அவர்க்கும் இடம் அளிக்கப்பெறும்.
- உணவுத் தட்டும் விலையுயர்வும் உள்ள இக் காலத்தில் ஆண்டுக்கு ரூ. 200-க்கு மேற்படாத குறைந்த செலவிலும், விடுதியிற் கலந்து கொள்ள வாய்ப்புண்டு.
- தூய்மையிலும், பணியிலும், ஒருமையிலும் ஆர்வமுடையோர்க்குக் குருகுல இல்லத்தின் வாயில் என்றுந் திறந்திருக்கின்றது!

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்: தி. ச. பாலசுந்தரம், குருகுல அச்சகம், மாம்பாக்கம், மதுராந்தகம் (அஞ்.)